பிற்பட்டோர் நல ஆலோசனைக்குழு.

*வினா எண். 683— திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பிற்பட்டோர் நல ஆலோசனைக்குழு அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) மற்றும் (ஆ) மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக்குழு ஒன்று ஏற்கெனவே உள்ளது. அந்தக் குழுவினைத் திருத்தியமைக்கும் செயற்குறிப்பு ஒன்று தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : இந்தப் பிற்பட்டோர் நல ஆலோசனைக்குழு அமைக்கும் திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே பிரப்போசல் தயாரித்திருப்பதாகச் சொன்னார்கள். அதிலே யார் யார் இடம் பெறுகிறார்கள் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

[முற்பகல் 9·40]

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல பயனுள்ள ஆலோசனைகளைக் கூறுவதற்கு தகுதி உள்ளவர்கள் என்று அரசு யாரைக் கருதுகிறதோ அவர்களை எல்லாம் நிச்சயமாக இந்த ஆலோசனைக் குழுவில் அரசு நிர்ணயிக்கின்ற எண்ணிக்கைக்கு அதிகரிக்காமல் அங்கம் வகிக்கச் செய்வதற்கு ஆன வழிவகையை அரசு செய்யும்.

திரு எஸ். ஆர். இராதா : துணைத்தலைவர் அவர்களே, இந்தக் குழுவில் உறுப்பினர்களைப் போடும் போது, பிற்பட்டோர் என்று சொல்லப்படுகிற நேரத்திலே இந்தத் தமிழ்நாட்டிலுள்ள மக்கள் தொகையில் ஏதோ கணிசமான அளவிற்கு அதிகமாக இருக்கின்ற வகுப்பைச் சேர்ந்த பிற்பட்டவர்களைத்தான் போடுவதாகத் தெரிகிறது. மிகக் குறைந்த அளவிற்கு 2 அல்லது 3 சதவீதம் என்ற அளவிற்கு இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்கள் பலபேர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். ஆகவே அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அதிலே பிரதிநிதித்துவம் கொடுத்து அவர்களின் நலனிலும் அக்கறையை அரசு காட்டுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்வதற்கு நான் தயாராக இல்லை. மாநிலத்திலே எந்த எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பிற்பட்ட சமுதாயம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதோ அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், கூடுமான மட்டும், 156 பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மாநிலத்திலே இருக்கிறார்கள். அந்த 156 சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுப்பது என்பது முடியாது. ஆகவே அரசு எந்த எந்தச் சமுதாயத்தை சேர்ந்தவர்களை அந்தக் குழுவிலே அமைத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறதோ அவர்களுக்கு நிச்சயமாக அந்தக் குழுவிலே பிரதிநிதித்துவம் கொடுக்கும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஏற்கனவே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறபோது அதை மாற்றி திருத்தி அமைப்ப தற்கு அடிப்படை நோக்கம் என்ன? அதே நேரத்திலே நல்ல ஆலோசனையைக் கொடுக்கக்கூடியவர்கள் யாராக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். நல்ல ஆலோசனையைக் கூறுகிறவர்கள் யார், கூறாதவர்கள் யார் என்பதை எந்த அடிப்படையிலே அரசு நிர்ணயிக்கும்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கின்ற உறுப்பினர்களை எதற்காக மாற்றியமைக்கிறீர்கள் என்று கேட்டார்கள். இந்த அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகுதான் அந்தக்குழுவிலே இருக்கின்ற உறுப்பினர்களை மாற்றியமைக்கிறது என்ற நிலைமை இல்லை. அந்தக் குழு எந்தக்காலத்திலேயிருந்து அமைக்கப் பட்டதோ அப்போது இருந்து 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றி அமைக்கப்படுகிறது. அந்த முறையில் இந்த ஆண்டு அந்தக் குழுவிலே இருக்கின்ற உறுப்பினர்களை மாற்றியமைக்க இந்த அரசு முடிவு எடுத்து அதைப் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. நல்ல ஆலோசனையைக் கூறக்கூடியவர்கள் யார் என்று எப்படி முடிவெடுக்கிறார்கள் என்று அவர்கள் கேட்டார்கள் அந்தச் சமுதாய வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்களாக இருக்கின்றவர்களை, அந்தச்சமுதாயத்தின்முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு சரித்திர வரலாற்றை ஏற்படுத்திக் கொண்டவர்கள் அப்படிப் பட்டவர்களை இந்தக் குழுவிலே அமைப்பதின் மூலம் இந்தக் குழுவில் அவர்கள் நல்ல ஆலோசனைகளைத் தருவார்கள் என்று நம்பித்தான் அரசு அவர்களை எடை போடுகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழுவில் ஏற்கனவே பிற்பட் டோர் என்று அங்கீகரிக்கப்பட்டவர்கள் தான் இடம் பெற்றிருக் கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இன்றைய தினத்தில் சமூக, பொருளாதார, அரசியல், கல்வியில்

1979 ஏப்ரல் 11]

பிற்பட்ட சமூகங்கள் நிறைய இருக்கின்றன. அவர்கள் தங்களையும் பிற்பட்ட சமுதாயம் என்று அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். எனவே அவர்களையும் இந்தக் குழுவிலே சேர்க்க அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு.க. உரொ. எட்மண்ட்: துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு கோரிக்கைகள் அரசுக்கு நிச்சயம் வரும். கோரிக்கையைக் கொடுக்கிறவர்களையெல்லாம் இந்தக் குழுவிலே அங்கம் வகிப்பதற்கு வாய்ப்பு அளிப்பது என்பது அரசுக்கு இயலாத காரியம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்போது ஆலோசனைக் குழு இருக்கிறது. இந்தக் குழுக்களிலே எடுத்துக்கூறுகின்ற பல ஆலோசனைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆகவே அமைய இருக்கின்ற பிற்பட்டோர் நல ஆலோசனைக்குழுவிற்கு அதிகமான அதிகாரங்களை அரசு வழங்குவதற்கான ஏற்பாடுகளைஅமைச்சர் அவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இந்தக்குழு It can only be an Advisory Committee, and not an executive ommittee.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த ஆட்சி ஆரம்பிக்கப்பட்டு இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் ஆலோசனைக் குழுவிலே போடவேண்டுமென்ற ஆலோசனை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இன்னும் எவ்வளவு நாட்கள் பிடிக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எத்தனை நாட்களுக்குள்ளாகப் போடப்போகிறீர்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கூடிய விரைவில் இந்தக் குழு அமைக்கப்படும் என்கின்ற உறுதிமொழியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, குழுவிலே நியமிக்கப்படக்கூடியவர்கள் சமுதாய மேம்பாட்டுக்காகப் பாடுபட்ட நீண்ட வரலாறு உடையவர்களும், மரபு உடையவர்களுமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த மரபையும், அந்த வரலாற்றையும் எந்த அடிப்படையிலே அரசு கணிக்கப் போகிறது என்பதற்கு விளக்கம் வேண்டும். அரசியல் ரீதியாக மரபு வரலாறா? அல்லது

சமுதாய அடிப்படையிலே ஒருவர் ஆற்றிய தொண்டின் அடிப்படையில் மரபு வரலாறா? எந்த அடிப்படையில் கணிக்கப் போகிறீர்கள்? ஏதாவது அப்படிப்பட்ட மரபு உடையவர்களை அரசு தேர்ந்தெடுத்து தன் கவனத்தில் வைத்துள்ளதா? அப்படி என்றால் யார் யாரை நியமிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்பலாமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரவர்களே, யார் யாரை இந்தக் குழுவிலே நியமிப்பது என்று அரசு எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை என்பதை முதற்கண் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசியல் ரீதியாக அவர்களுடைய தொண்டு கணிக்கப்படுமா அல்லது சமுதாய ரீதியாக அவர்களுடைய தொண்டைக் கணிக்கப் போகிறீர்களா என்று கேட்டார்கள். இரண்டு ரீதியிலும் நாம் அவர்கள், சமுதாயத்திற்குச் செய்த தொண்டைக் கணக்கிட வேண்டிய நிலையிலே இருக்கிறோம்.

பொது நூலகங்களில் வானொலிப் பெட்டிகளை இயக்குதல்.

*வினா எண் 684—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

ஊராட்சி மன்றங்களின் வானொலிப் பெட்டிகள் பொது நூலகங்களில் வைத்து இயக்கப்படுவதைத் தவிர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஊராட்சி மன்றங்களின் வானொலிப் பெட்டிகள், எல்லா பொது கிளை நூலகங்களிலும், வைத்து இயக்கப்படுவதில்லை. கிளை நூலகங்கள் இயங்க, ஊராட்சி மன்றங்களால் இலவசமாக நூலக ஆணைக் குழுக்களுக்கு, தரப்பட்ட குறிப்பிட்ட சில நூலகக் கட்டிடங்களில்தான் வானொலிப் பெட்டிகள் இயக்கப்படுகின்றன. அவைகளிலும், பொதுவாக வாசகர்களுக்கு இடையூறு இன்றி ஒரு பகுதியில் நூலக அலுவல் நேரத்திற்குப் பிறகு இயக்கப்படுகின்றன.

திரு. போ. கோபாலன்: தலைவரவர்களே, பல்வேறு கிளை நூலகங்களில் மாலை ஐந்து மணியானவுடன் அப்படிப்பட்ட ஒலிபெருக்கிகள் ஒலிபரப்பப் படுவதை நானே நேரில் கேட்டிருக்கிறேன். எங்கள் ஊரிலேயே அப்படிப்பட்ட நிலை